குறைத்து சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு, மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

208—

தொழிற்பயிற்சி நிலையம்

***13757—திரு. மு. பாபு:**

மாண்புமிகு தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். செய்யூர் சட்டமன்றத் தொகுதியில், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பாபு அவர்கள் புதிய தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். தற்போது செய்யூர் சட்டமன்றத் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் கருத்துரு எதுவும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள்.

திரு. மு. பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் நலன்மீது மிகுந்த அக்கறைகொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தளபதியார் அவர்களின் அரசு, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையில் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்திருப்பதை மனதார வரவேற்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில் இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. ஒன்று செங்கல்பட்டில் உள்ளது, 580 இடங்கள்

2022 ஏப்ரல் 29]

இருக்கின்றன. அந்த 580 இடங்களில் 560 இடங்களில் மாணவர் சேர்க்கை நடந்துள்ளது. மற்றொன்று சென்னை பெரும்பாக்கத்தில் உள்ளது. அதில் மொத்தம் 172 இடங்களில் 152 இடங்களுக்கு மாணவர் சேர்க்கை நடந்துள்ளது.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பாபு உங்கள் கேள்வி என்ன? உங்களுக்கு என்ன வேண்டும்? தொழிற்பயிற்சி நிலையம் வேண்டும் அல்லவா? எந்த இடத்தில் வேண்டும் என்று கேளுங்கள்.*

திரு. மு. பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் தொகுதியில் ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில் இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இங்கு குறிப்பிட்டுள்ளார்கள். அதுமட்டுமல்லாமல், 7 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் உள்ளன. அரசால் அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2580. இந்த ஆண்டு 1401 மாணவர்கள் மட்டுமே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் 1179 மாணவர்கள் சேர்க்கைக்கான காலியிடங்கள் இருக்கின்றன. ஆகவே, இந்த இடங்களிலெல்லாம் மாணவர்களை இந்த ஆண்டு முழுமையாகச் சேர்க்கும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள்.*

திரு. மு. பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஏழு தனியார் I.T.I.-களும் பல்லாவரம், பரங்கிமலை, குரோம்பேட்டை, மீனம்பாக்கம், கேளம்பாக்கம் என சென்னைக்கு மிக அருகாமையில் அமைந்துள்ளன. இந்த I.T.I.-கள் அமைந்துள்ள*

பகுதிகளுக்கும், எனது தொகுதிக்கும் கிட்டத்தட்ட 101 கி.மீ. தூரம் உள்ளது. எனவே, செய்யூர் பகுதியில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 75 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 91 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்தான் இதுவரை உருவாக்கப்பட்டிருந்தன. ஆனால், ஆட்சிப் பொறுப்பேற்று இந்த 11 மாதங்களில் 11 தொழிற்பயிற்சி நிலையங்களை அறிவித்திருக்கின்ற ஒரே அரசு மாண்புமிகு தளபதி அவர்களின் அரசு என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவற்றை எதற்காக அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், படித்திருக்கின்ற இளைஞர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஆண்டு மட்டுமே 11 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் துவக்கப்பட இருக்கின்றன. ஆகவே, இந்த மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டு உங்களுடைய தொகுதியிலும் அங்கு இருக்கின்ற தொழிற்சாலைகளின்மூலம் மற்றும் அங்கு இருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுகின்ற சூழலுக்கேற்ப தொழிற்பயிற்சி நிலையம் உருவாக்கப் பரிசீலிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 209, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள். மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

209—

இ–சேவை மையம்

***1360—திரு. JMH. அசன் மௌலானா:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, பேபி நகர் பகுதியில் இ–சேவை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?